

உ
கணபதி துணை

# இந்து சமய வினா விடை

முதற்பதிப்பு: வைகாசி 2007

தொகுப்பு: திரு. இ. முருகதாஸ் மாஸ்ரர் பாசெல்

1. **வேதங்களை வகுத்துக் கொடுத்தவர் யார்?**
   வேதவியாஸர்.

2. **பதினெட்டுப் புராணங்களை உபகரித்தவர் யார்?**
   வேதவியாஸர்.

3. **சத்தியலோகத்தில் உள்ள மண்டபத்தின் பெயர் என்ன?**
   ஸபா மண்டபம்.

4. **ஈரேழு லோகங்களையும் படைத்தருளியவர் யார்?**
   பிரம்மதேவன்.

5. **சரஸ்வதியின் மறு பெயர் என்ன?**
   நாமகள், கலைமகள், ...

6. **பிரம்மதேவனின் மறு பெயர்கள் என்ன?**
   நான்முகன், கமலோற்பவன், வேதமுதல்வன், சதுர்முகன், திருசடைப்பிரான், மலரோன், ...

7. **பற்றற்ற பரமன் என்பது யாரைக் குறிக்கும்?**
   சிவபெருமானைக் குறிக்கும்.

8. **பிரம்மதேவன் அருந்தவசியர்களுக்காக படைத்தருளிய தபோவனத்தின் பெயர் என்ன?**
   நைமிசாரணியம்.

9. **முனிவர்கள்:**
   சவுனக முனிவர், சூத மாமுனிவர், சனத் குமார முனிவர், ...

10. **சந்திரவேள்வி என்பது ஒரு பிரம்மாண்டமான வேள்வி. இது எவ்வளவு காலம் நடைபெற்றது?**
    12 ஆண்டுகள்.

11. **ஆதி காலத்தில் சிவபெருமான் நந்தி பெருமானுக்கு எத்தனை புராணங்களை உபதேசித்து அருளினார்?**
    18 புராணங்களை உபதேசித்து அருளினார்.



© R. Murugathas Master Basel

12. **நந்தி பெருமான் 18 புராணங்களையும் எந்த முனிவர்க்கு உபதேசித்து அருள் செய்தார்?**

சனத் குமார முனிவர்க்கு உபதேசித்து அருள் செய்தார்.

13. **18 புராணங்களையும் சனத் குமார முனிவரிடம் இருந்து கேட்டுத் தெரிந்து கொண்டவர் யார்?**

வியாச பகவான்.

14. **வியாச பகவான் அந்த 18 புராணங்களையும் என்ன செய்தார்?**

சுலோகங்களாக்கி உலகம் உய்ய அச் சுலோகங்களை வழங்கினார்.

15. **வியாச பகவான் 18 புராணங்களையும் சுலோகங்கள் ஆக்கிய பின்னர் வேறு பற்பல முனிவர்கள் அப்புராணங்களை என்ன செய்தார்கள்?**

வேறு வேறு பரம்பரை வழியாக உபதேசம் பெற்று, அம்மகா புராணங்களுக்கு 18 உப புராணங்கள் இயற்றி அருளினார்கள்.

16. **சிவபெருமானின் மறு பெயர்கள் யாவை?**

கயிலைமலைவாசன், முக்கண்ணப்பெருமான், ஸ்ரீ பரமேஸ்வரன், ...

17. **விநாயகப்பெருமானின் திருமுகமும், திருதுதிக்கையும் எந்த எழுத்தின் வடிவத்தைப் போல் அமைந்துள்ளது?**

ஓம் என்ற எழுத்தின் வடிவத்தைப் போல் அமைந்துள்ளது.

18. **விநாயகப்பெருமானின் பெருவயிறு எக்கருணையைக் காட்டுகிறது?**

பிரபஞ்சம் அனைத்தையும் அவர் தமக்குள் அடக்கிக் காக்கும் கருணையை காட்டுகிறது.

19. **விநாயகப் பெருமானின் வாகனம் எது?**

மூஷிக வாகனம். (எலி)

20. **எந்த மன்னன் கட்டளைப்படி ஸ்ரீராமர் காடாண்டார்?**

தசரத மன்னன் கட்டளைப்படி (தந்தை)

21. **தன்னுடைய நாதத்தை விலக்கி வைக்காதது எது?**

வீணை.

22. **குளிர்மையைப் பிரியாதது எது?**

நிலவு.

23. **மணத்தை ஒதுக்கிவைக்காதது எது?**

மலர்.

24. **தூயவடிவினன் என்பது யாரைக் குறிக்கும்?**

இறைனைக் குறிக்கும்.


© R. Murugathas Master Basel

25. **ஸ்ரீ கிருஷ்ணரின் மறு பெயர்கள் யாவை?**

திருமால், மதுசூதன், நாராயணன், ...

26. **வேதங்கள் எத்தனை வகை?**

4 வகை, (ரிக், யசுர், சாமம், அதர்வணம்)

27. **பிரம்மா எந்த மலரில் எழுந்தருளியுள்ளார்?**

தாமரை மலரில் எழுந்தருளியுள்ளார்.

28. **வேத வியாசர் யாருடைய அம்சம்?**

ஸ்ரீ கிருஷ்ணரின் அம்சம்.

29. **யாரை வணங்காமல் ஒரு காரியமும் செய்யக்கூடாது?**

ஸ்ரீ விநாயகரை வணங்காமல் ஒரு காரியமும் செய்யக்கூடாது.

30. **அண்டமானவர், மும்மூர்த்திகளின் குருவுமானவர் என்பது யாரைக் குறிக்கும்?**

பிள்ளையாரைக் குறிக்கும்.

31. **பிள்ளையாரின் மறு பெயர்கள் யாவை?**

விநாயகர், கணநாதர், ஆனைமுகன், ...

32. **அரசன் அதிகாலையில் துயிலெழுந்ததும் முதலில் செய்யவேண்டியவைகள் யாவை?**

பொழுது விடிவதற்கு 5 மணிக்கு முன் துயிலெழ வேண்டும். படுக்கை அறையை விட்டு மற்றொரு இடத்திற்கு சென்று, திருவெண்ணீற்றை நெற்றியிலும் உடம்பிலும் முறைப்படி பூசிக்கொள்ளவேண்டும். அது சமயம் ஆசானை மனதில் கொள்ளுதல் வேண்டும். பின்னர் நிலமாகிய பூமிதேவியை கண்களில் ஒற்றிக்கொண்டு தாயே எனது கால்கள் நின்மீது படுதவால் ஏற்படுகின்ற பெரும் பாவத்தினைப் பொறுத்தருள்வாயாக என்று பிரார்த்திக்கவேண்டும். பின்னர் வினைதீர்க்கும் விநாயகப் பெருமானையும், சிவபெருமானையும், உமாதேவியையும், திருமாலையும், கதிரவனையும், மற்ற தேவர்களையும், முனிவர்களையும், முறையாக தியானிக்கவேண்டும். இத்தகைய நித்திய கருமங்களை முடித்துக்கொண்டுதான் அரசர்க்குரிய கடமைகளைச் செய்யத் தொடங்கவேண்டும்.

33. **விநாயகப்பெருமானின் இராஜஸ குணத்தில் தோன்றியவர் யார்?**

பிரம்மா.

34. **விநாயகப்பெருமானின் தாமச குணத்தில் தோன்றியவர் யார்?**

ஸ்ரீ கிருஷ்ணர்.

35. **விநாயகப்பெருமானின் சாத்வீக குணத்தில் தோன்றியவர் யார்?**

சிவபெருமான்.

36. **விநாயகப்பெருமானின் திருவயிற்றுள் எவைகள் அடங்கியுள்ளது?**

அண்ட சராசங்களும் அனந்த கோடி ஜீவராசிகளும்.


© R. Murugathas Master Basel

37. **விநாயகப்பெருமானின் பேரருளால், பிரம்மாவின் படைப்புத்தொழிலில் முதலில் தோன்றியவர்கள் யாவர்?**

கிரியா சக்தி, ஞான சக்தி என்ற இரு சக்திகளும் சித்தி புத்தி என்னும் திருப்பெயர் கொண்ட தெய்வ மகளிராய் பிரம்மாவின் முன்னே தோன்றினர். பிரம்மா இவர்களைப் பார்த்து நிங்கள் இருவரும் விநாயகப்பெருமானின் அருளால் அவதரித்தீர்கள், ஆதலால் எனது அருந்தவப்புதல்விகளாக என்னுடனேயே இருக்கும்படி கேட்டுக்கொள்ள, அதற்கு அவர்கள் இருவரும் உங்கள் புத்திரியர்களாக விளங்குவதால் மட்டில்லா மகிழ்ச்சி கொள்கின்றோம் என்று கூறி பிரம்மாவின் பாதங்களை பணிந்து பூரித்து நின்றனர்.

38. **தொடரும்**

...


© R. Murugathas Master Basel